## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(15.05.2024 முதல் 19.06.2024)

**அறிக்கைஎண்: 22/2024** **தேதி : 14.06.2024**

**அரியலூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை**

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 36 - 37 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 - 28 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது

**அரியலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (15.06.2024 முதல் 19.06.2024).**

| கடந்த வார வானிலை (11.06.2024 முதல் 13.06.2024) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (15.06.2024 முதல் 19.06.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 11/06 | நாள்-2 12/06 | நாள்-3 13/06 | தேதி | நாள்-1 15/06 | நாள்-2 16/06 | நாள்-3 17/06 | நாள்-4 18/06 | நாள்-5 19/06 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 2 | 0 | 9 | 0 |
| 37 | 37 | 36 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 35 | 35 | 35 | 34 | 34 |
| 27 | 28 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 25 | 25 | 25 | 24 |
| 6 | 7 | 6 | மேகமூட்டம் (ஆக்டா) | 7 | 6 | 5 | 5 | 6 |
| 74-47 | 78-59 | 76-61 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60-30 | 60-30 | 70-30 | 70-40 | 60-30 |
| 23 | 17 | 13 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 16 | 14 | 16 | 18 | 18 |
| மேற்கு | மேற்கு | தென் மேற்கு | காற்றின் திசை | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

**அரியலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 16.06.2024 மற்றும் 18.06.2024 ஆகிய தினங்களில் லேசான தூரல் எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34 - 35 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24 - 25 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 60 - 70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 30 - 40 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 14 – 18 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

| | |
|---|---|
| பொது | மழை அளவை பொறுத்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் அல்லது தள்ளிபோடவும். |

| | | |
|---|---|---|
| நெல் | நாற்றாங்கால் | குறுவை பருவத்திற்கு நாற்றாங்கால் தயார் செய்யும் போது ஒரு எக்டருக்கான 20 சென்ட் நாற்றாங்காலில் ஒரு டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இடவேண்டும். களிமண் நிலத்திற்கு 4 கிலோ ஜிப்சமும் ஒரு கிலோ டி.ஏ.பி. ஒரு சென்ட் நாற்றாங்காலுக்கு என்ற அளவில் விதைத்த 10 ஆம் நாள் இடவேண்டும். இது வேர் அறுபடாமல் நாற்றுக்களை பறிக்க உதவும் |
| நெல் | நடவு வயல் | நடவு வயலில் ஒரு ஏக்கருக்கு அடியுரமாக தழை/ மணி, சாம்பல் சத்துடன் 10 கிலோ ஜிங்சல்பேட்டும், 200 கிலோ ஜிப்சமும் இடவேண்டும். |
| தென்னை | | உகந்த வானிலை இருப்பதால் தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிர்ப்பதற்க்கு 200 மி.லி தென்னை டானிக்கை வேர் மூலம் கொடுக்கவும். |
| வாழை | | வாழை மரங்கள் காற்று மற்றும் மழையால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| கால்நடைகளுக்கு | மாடு | வெய்யிலின் தாக்கத்தை குறைக்க மாட்டுத் தொழுவத்திற்கு அலுமினியத்தாலான மேற்கூரை இடவும் |

## குறுஞ்செய்தி

உகந்த வானிலை இருப்பதால் தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிர்ப்பதற்க்கு 200 மி.லி தென்னை டானிக்கை வேர் மூலம் கொடுக்கவும்.

.

**இயக்குநர்**